ஆகவே, திருப்பதிக்கு அடிக்கடி செல்லவேண்டுமென்று விரும்புவார் போல இருக்கிறது. ஆகவே அவருடைய கோரிக்கையையும் மக்களுடைய கோரிக்கையாக ஏற்று அந்தக் கோரிக்கையை நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளும்.

திரு. இராம. இராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதையும் கேட்டவுடனேயே கொடுக்கின்ற தமிழகத்தினுடைய முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் இந்தப் புனித ஆட்சியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பக்திமானுக்கு நிச்சயமாகச் செய்கின்றேன் என்ற நல்ல எண்ணத்தோடு மீண்டும் அந்தப் பேருந்தை இயக்குவதற்கான வாக்கினைக் கொடுத்ததற்கு அவருக்கு முதலிலே என்னுடைய நன்றியை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அதைப்போல முன்பு கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு ஒரு சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸும் வந்துகொண்டிருந்தது. அந்தப் பேருந்தையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கும்பகோணம் வந்து மீண்டும் தொடங்கி வைப்பதற்கான விழாவினையும் நாங்கள் ஏற்பாடு செய்திருந்தோம். ஆனால் தமிழகத்தின் ஒப்புயர்வற்ற முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த நாட்டினுடைய மக்களுக்காக தன்னை வருத்திக்கொண்டு இங்கே சென்னையிலே புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சமாதிக்கு முன்பாக உண்ணா நோன்பை மேற்கொண்டு, மிகவும் சிரமமான சூழ்நிலையிலே கூட இந்த நாட்டுமக்களுக்காக உழைத்து, தன்னுடைய உயிரையும் தியாகம் செய்து மக்களுக்காகப் போராடுவேன் என்று சொன்ன அந்த தினத்திலே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இங்கே இருக்கவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டிருந்தது. (மணியடிக்கப்பெற்றது) எனவே சூப்பர் டீலக்ஸ் பஸ் விடமுடியாத சூழ்நிலை அன்றைக்கு ஏற்பட்டுவிட்டது. எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இன்றைக்கு திருப்பதிக்கு நிச்சயமாகப் பேருந்தை விடுவோம் என்ற உறுதியைக் கொடுத்ததோடு, சூப்பர் டீலக்ஸ் பஸ்ஸை கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு விடுவதற்கான ஏற்பாடுகளையும் செய்து தருவார்களா என்பதையும் மிகவும் ஆர்வத்தோடு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூப்பர் டீலக்ஸ் பேருந்துகள் கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்படுமா என்று கேட்டார்கள். சூப்பர் டீலக்ஸ் பஸ் மிக விரைவாக கும்பகோணத்திலிருந்து சென்னைக்கு இயக்கப்படும். நீங்களும் சூப்பராக இந்த சட்டமன்றத்திற்கு வரலாம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 205, திரு. சி. இராமசுவாமி; மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

205—

தமிழக முதல்வர் பெயரில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கழகத்தின் மூலம் மாநிலத் தலைநகரங்களுக்குப் பேருந்துகள் இயக்குதல்.

*** 26400**—திரு. சி. இராமசுவாமி :

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழக முதல்வர் பெயரில் அமைக்கப்பட்டுள்ள போக்குவரத்துக் கழகத்தின் மூலம் ஐதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம் மற்றும் இதர மாநிலத் தலைநகரங்களுக்குக் குளிர் சாதனப் பேருந்துகள் இயக்க அரசிடம் திட்டம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : சென்னைக்கும், பெங்களூருக்கும் இடையே குளிர் சாதனப் பேருந்துகள் இயக்கும் பொருட்டு குளிர் சாதனம் மற்றும் ஒளி, ஒலி வசதிகளைக் கொண்ட இரண்டு சொகுசுப் பேருந்துகள் கட்டப்பட்டு வருகின்றன. மேலும் மற்ற மாநிலங்களில் உள்ள முக்கிய இடங்களுக்கு இத்தகைய குளிர் சாதனப் பேருந்துகள் இயக்க நடவடிக்கை மேற்கொண்டு வருகிறோம்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி பெயரால் அமைக்கப்பட்ட போக்குவரத்துக் கழகத்தில் ஐதராபாத், பெங்களூர், திருவனந்தபுரம் போன்ற பிற மாநிலத் தலைநகரங்களுக்கும் தொடர்ச்சியாகப் பேருந்துகள் இயக்கப்படுமா? அதிலும் குளிர் சாதன வசதிகள் செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாளை என்னுடைய மானியக் கோரிக்கை நடைபெற இருக்கிறது. இந்தக் குளிர் சாதனப் பேருந்துகளை ஒரு வாரத்தில் இயக்குவோம் என்று சொல்கிறபோது, அதிலே இன்னும் சில மாற்றங்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம். பெண்கள் அதில் பயணம் செய்கிறபோது, கழிப்பறை வசதிகள் இல்லையென்ற காரணத்தாலே, எந்தப் பேருந்திலும் கழிப்பறை வசதியோடு இருக்கிற பேருந்துகள் இந்தியத் துணைக் கண்டத்திலே மட்டுமல்ல, ஆசியக் கண்டத்திலேயும் கிடையாது என்கிற அளவுக்கு, அதுபோன்று நாம் உருவாக்குவதற்காக, மீண்டும் அந்தக் குளிர் சாதனம் பொருத்தப்பட்டிருக்கிற பேருந்துகள் எங்களுடைய பார்வைக்காக இங்கே

வருகிறபோது அதிலே கழிப்பறை வசதிகள் செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் நடவடிக்கைகள் மேற்கொண்டு இருக்கிறோம். அது இந்தியத் துணைக் கண்டத்திற்கே ஒரு எடுத்துக்காட்டாக அமையும்.

திரு. சி. இராமசுவாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீண்டதூரம் பயணம் செய்வதால் இருக்கையில் தூங்கிக் கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்கைகளை ஏற்படுத்த அரசு முன்வருமா ? விமானத்தில் பயணம் செய்யும்போது சிற்றுண்டி வழங்குகிறார்கள். அதுபோன்று முதல்வர் பெயரில் இயங்கும் இந்தப் பேருந்துகளில் செல்லும்போது சிற்றுண்டி வழங்க ஆவன செய்யப்படுமா என்றும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவை இரவு நேரங்களில் இயக்கப்படுகின்ற பேருந்துகள். அவர்கள் சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டே அந்தப் பேருந்தில் பயணம் செய்யலாம்.

முற்பகல் 10.20

மாண்புமிகு பேரவைத் தலைவர் : செல்வி கோ. மல்லிகா.

செல்வி கோ. மல்லிகா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பெயரால் இயங்கிவரும் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் அகில இந்திய அளவில் பாராட்டுப் பெற்ற ஒரு நிறுவனமாக வளர்ந்துவரும் இன்றைய சூழ்நிலையில், சிவன் ஆலயங்களில் பிரசித்தி பெற்ற சிதம்பரம் நகரிலிருந்து பெங்களூர், ஹைதராபாத், திருவனந்தபுரம் போன்ற அண்மையிலுள்ள மாநிலத் தலைநகர்களுக்குப் பேருந்து விட அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து ஆலயங்களையும் ஒன்றாக இணைத்து பேருந்துகளை இயக்கலாம் என்ற ஒரு நிலையையும் நாங்கள் பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். எதிர்காலத்திலே உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. த. ரத்தினவேல்.

திரு. த. ரத்தினவேல் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் திருநாமத்தால் அமைந்துள்ள போக்குவரத்துக் கழகத்தின் மூலம் தமிழகத்தில் மிகப் பெரிய தொழிற்சாலையான பி.எச்.ஈ.எல். பகுதியிலிருந்து கேரள மாநிலத் தலைநகரான திருவனந்தபுரத்துக்குப் பேருந்து விடப்படுமா ? ஏனென்றால் 30 ஆயிரம் தொழிலாளர்கள் பி.எச்.ஈ.எல். மற்றும் சிறு

தொழிற்பேட்டைகளில் அங்கே பணிபுரிகிறார்கள். திருநெல்வேலி, நாகர்கோயில் மற்றும் கன்னியாகுமரி, திருவனந்தபுரம் ஆகிய ஊர்களைச் சேர்ந்த தொழிலாளர்கள் அங்கே பணிபுரிவதால், அந்தத் தொழிலாளர்களின் நீண்டநாள் கோரிக்கையை நிறைவேற்றும் வண்ணம் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்களின் பொற்கால ஆட்சியில் அவரது திருநாமத்தால் அமைந்துள்ள போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் விடப்படுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே இருக்கிற மக்கள் புரட்சித் தலைவி ஆட்சிதான் 20 ஆம் நூற்றாண்டிலும் இருக்க வேண்டும் ; 21 ஆம் நூற்றாண்டிலும் இருக்க வேண்டும் என்று விரும்புகிறபோது, புரட்சித் தலைவி அவர்களின் புனிதப் பெயரால் இருக்கிற அந்தப் போக்குவரத்துக் கழகப்பேருந்துகள் எல்லா இடங்களுக்கும் வேண்டும் என்கிற ஆசை எங்களுக்கும் இருக்கிறது. அரசு நிதி நிலைக்கு ஏற்ப பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எல்லா இடங்களிலே இருந்தும், பஸ் வசதி கேட்பவர்களுக்காகத்தான் உறுப்பினர்கள் கையைத் தூக்கிக்கொண்டு இருக்கிறார்கள். நாளைக்கு மானியக் கோரிக்கை வருகிறது. உறுப்பினர்கள் அதிலே பேசலாம்.

வினா எண் 206, டாக்டர் க. கோபால்; மாண்புமிகு கைத்தறித்துறை அமைச்சர்.

206—

நாகப்பட்டினம் – காயிதே மில்லத் மாவட்டத்தில் நூற்பாலை அமைத்தல்.

*** 23640**—*டாக்டர் க. கோபால்:*

மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம்-காயிதே மில்லத் மாவட்டத்தில் ஒரு நூற்பாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. இ. மதுசூதனன், கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) எழவில்லை..

டாக்டர் க. கோபால் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக நாகை-காயிதே மில்லத் மாவட்டத்தில் கோடைக் காலத்தில் ஊடுபயிராக இப்போது பெரும்பாலான நிலங்களில் எல்லாம் மிக உயர்ந்த ரகப் பருத்தி விளைவிக்கின்ற சூழ்நிலை இருக்கின்றது. அப்படி